C.S.I. TAMIL PARISH AL AIN, UAE

தென்னிந்திய தமிழ் திருச்சபை அல் அய்ன்



# மன்னா..

பொழிவு : 17 JULY 2025 ஆகாரம் : 07



# UPCOMING EVENTS

**All Sun July '25** — Sunday
5:00 pm
**OUT REACH MINISTRY - CAMP**
C.S.I. TAMIL PARISH AL AIN, UAE

**All Tue July '25** — Sunday
7:30 pm
**COTTAGE PRAYER**
Church Members House

**05 July '25** — Saturday
5:00 pm & 6.30 pm
**MONTHLY FASTING PRAYER**
Parsonage - C.S.I. Tamil Parish Alain

**All Wed July '25** — Wednesday
7:30 pm
**BIBLE STUDY & PRAYER**
Parsonage - C.S.I. Tamil Parish Alain

**12 26 July '25** — Saturday
7:30pm - 09:30pm
**EVENING SERVICE**
Evangelical Church Campus
Kanad hospital - Al Ain

**05 19 July '25** — Saturday
7:30pm - 09:30pm
**HOLY COMMUNION SERVICE**
Evangelical Church Campus
Kanad hospital - Al Ain

**31 July '25** — Thursday
5:00 pm
**MONTH END SERVICE**
Parsonage - C.S.I. Tamil Parish Alain

**26 July '25** — Saturday
9:30 pm
**BIBLE QUIZ-EZRA, NEHEMIAH, ESTHER**
C.S.I. TAMIL PARISH AL AIN, UAE

**அன்பிற்கினியவர்களே, ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் திருப்பெயரில் நல்வாழ்த்துக்கள்.**

"உடைத்து அழிப்பது எளிது, சமாதானம் செய்து கட்டியெழுப்புபவர்களே ஹீரோக்கள்" என்றவர் "கருப்பு காந்தி" என அழைக்கப்பட்ட நெல்சன் மண்டேலா ஆவார். இவர் 1918 ஆம் ஆண்டு ஜூலை 18 ஆம் தேதி தென் ஆப்பிரிக்காவில் உள்ள ஒரு குக் கிராமத்தில் பிறந்தவர். இனவெறி மிகுந்தச் சூழலில் கருப்பர் இன விடுதலைக்காக, "நிறவெறி ஒழிப்புப் போராட்டம்" செய்தவர். இதனால் 27 ஆண்டுகள் கடுமையான சிறைத் தண்டனையை அனுபவித்தவர். சிறை வாசத்திற்குப் பின்னர் விடுதலை பெற்று,தேர்தலில் போட்டியிட்டு அபார வெற்றி பெற்ற நெல்சன் மண்டேலா அவர்கள், 1994 ஆம் ஆண்டில் தமது பதவி ஏற்பின் போது கூறிய முதல் வாக்கியம், "காயங்களை ஆற்றுகிற நேரம் இது" என்பதே. இதனைக் கூறியபோது அநேகம் ஆயிரம் மக்கள் கண்ணீர் சிந்தினர். தொடர்ந்து சிறந்த ஆட்சியைச் செய்தவர், நெல்சன் மண்டேலா அவர்கள் அமைதிக்கான நோபல் பரிசினை 1993 ஆம் ஆண்டு பெற்றவர்.அயல் நாட்டவரான நெல்சன் மண்டேலாவுக்கு இந்தியாவின் உயரிய விருதான பாரத ரத்னா விருது இந்திய அரசால் 1090 ஆம் ஆண்டு கொடுக்கப்பட்டது. நவம்பர் 2009 இல் ஐக்கிய நாடுகளின் சபை ஜூலை 18 ஆம் தேதியை நெல்சன் மண்டேலா சர்வ தேச தினம் என அறிவித்தது. இந்த ஜூலை மாதத்தில் நாமும் சமாதானத்துக்கான வாழ்வை கடைப்பிடிக்கத் தொடர்ந்து சிந்திக்கலாம்.

# From the Pastor's Desk



அன்பிற்கினியவர்களே, யூத மக்களின் பெருந்தலைவர் மோசே சீனாய் மலையில் கடவுளின் சட்டத்தை பெற்றுத் தந்தார். மலையின் மீது ஆண்டவர் இயேசு புதிய மோசேயாக, அன்பின் புதிய சட்டங்களாக திரளான மக்களுக்கு அருளுரை ஆற்றினார். இதனை மத்தேயு ஐந்து, ஆறு, ஏழு ஆகிய மூன்று அதிகாரங்களில் படிக்கிறோம், அதனை சற்றே தியானிப்போம்.

## சாந்தகுணம்:

கனிவு உள்ளவர்கள் பேறு பெற்றோர் (பாக்கியவான்கள்—மத்தேயு:5:7). இன்றைய உலகச் சூழல் வன்முறையும், பிரிவினையும், நோய்களும், போர்களும் இன்னும் சொல்லொனா நெருக்கடிகளின் மத்தியிலும் இருக்கின்ற நிலமை. இந்நிலையில் கனிவுள்ள அல்லது சாந்தகுணம் உள்ள மக்களாக வாழவே ஆண்டவர் இயேசு நம்மை அழைக்கிறார். அமைதியற்ற நிலையில் இருக்கின்ற மக்களிடையே ஒவ்வொரு கிறிஸ்தவரும் கனிவு கொண்ட மக்களாக செயல்பட வேண்டும், இதற்காகத் தங்களை அர்ப்பணிக்க வேண்டும்.

## உப்பும், ஒளியும்:

ஆண்டவர் இயேசு ஒவ்வொரு கிறிஸ்தவருக்கும் தரும் முகவரியானது நீங்கள் பூமிக்கு உப்பு (மத்5:13), நீங்கள் உலகத்துக்கு வெளிச்சம் (மத்5:14) என்பதே. உப்பும், விளக்கும் இல்லாத இடமில்லை. குடிசையோ, கோபுரமோ இவை இரண்டும் முக்கியமானவை. உப்பும் விளக்கும் இன்றி இரவும் விடியாது, பொழுதும் போகாது. அப்படியானால் அதன் முக்கியத்துவம் அவ்வளவு தனித்தன்மையானது. அவ்வாறு ஒவ்வொரு கிறிஸ்தவரும் தாங்கள் இருக்கின்ற, வாழுகின்ற இடங்களில் பயனுள்ள, சான்றுள்ள மக்களாக வாழ வேண்டும் என்பதனையே ஆண்டவர் இயேசு மலைப் பிரசங்கத்தில் கூறுகிறார். அப்படி உங்களின் நற்கிரியைகள் மனிதரிடையே இருந்திட வேண்டும் (மத் 5:16). அதுவே கடவுளுக்கு மாட்சி, அதற்கு நீங்களே சாட்சி என்றார்.

நிறைவாக, நெல்சன் மண்டேலா அவர்கள் ஓர் இன மக்களின் வாழ்வுக்காக நெடிய போராட்டம் மேற்கொண்டார், விடுதலையும் பெற்றார். காரணம் அம்மக்களின் மீது அவருக்கு இருந்த கனிவு ஆகும்.அதனால் அவர் உப்பாக, ஒளியாக வாழ்ந்தார். கிறிஸ்தவர் ஒவ்வொருவரும் சாந்தகுணம் கொண்டோராக, இந்த பூமியில் உப்பாக, ஒளியாகத் திகழ—வாழ ஆண்டவர் இயேசு நம் ஒவ்வொருவரையும் அழைக்கிறார். அர்ப்பணிப்போமா? ஒப்புக் கொடுத்து, ஆண்டவர் இயேசுவின் வழியில் வாழ்வோம். ஆண்டவர் இயேசு கிறிஸ்து நம்மை ஆசீர்வதிப்பாராக, ஆமென்.

இறைப்பணியில்,

ஆயர்.

Rev. S.Baktha Thiyagarajan

## மன்னா ஜுன்-25 மீள் பார்வை...




ஆண்டவர் இயேசுவுக்கே மகிமை. ஜூன் மாத மன்னாவைக் குறித்த ஒரு பார்வை. பக்கம் 3-ல் திருமறையில் காகத்தின் நற்பண்புகளான, கர்த்தரின் வார்த்தைக்கு கீழ்ப்படிதல், கூப்பிடுதல், ஒற்றுமை ஆகியவற்றைக் கூறி, அவைகளைக் காட்டிலும் மனிதர்கள் சிறப்பானவர்கள் என்றும், பக்கம் 4-ல் செயலர் மடலில், கடந்த மாத திருச்சபை நிகழ்வுகள் மற்றும் சிந்தனைக்காக, கர்த்தருக்கு பயந்து அவரைப் பற்றிக் கொண்டு வாழ வேண்டும் என்றும், பக்கம் 5-ல் உலகு சார்ந்தவற்றை இச்சிக்கும் போது நாம் வீழ்ந்து போவோம், மாறாக நாம் விசுவாசம் என்னும் கேடகத்தை அணிந்து கொள்ளும் போது, உலகையே வெல்வோம் என்றும், பக்கம் 6-ல் நமக்கான நெருக்கடியான வேளைகளில் வேறு இடங்களில் புலம்புவதைத் தவிர்த்து, ஆண்டவரிடம் விசுவாசத்துடன் துதிப்போம், ஜெபிப்போம், ஜெயிப்போம் என்றும், பக்கம் 8-ல் ஆண்டவர் இயேசுவின் பிள்ளைகளின் நாட்டமும் ஓட்டமும் உலகைச் சார்ந்து அல்லாது, ஆண்டவரையே நோக்கி இருக்க வேண்டும் என்றும், பக்கம் 9-ல் அல்பேயுவின் மகன் யாக்கோபு என்ற இயேசுவின் சீடர் எளிமையான வாழ்ந்து, இரத்த சாட்சியாக மரித்ததைக் குறித்தும், பக்கம் 16-ல் வாழ்வு ஆச்சரியமானது, அது போராட்டங்கள் நிறைந்தது. அதனால் சோர்ந்து போகாமல் சமாதானப் பிரபுவான வெற்றி வேந்தர் இயேசுவைப் பற்றி வாழ வேண்டும் என்றும், சிறுபிள்ளைகளின் புதிர்களுக்கான விடைகள் எழுதியிருப்போர், சிறு பிள்ளைகளின் கைவண்ணங்கள், திருமறை வினாவிற்கான விடைகளை எழுதி இருப்போர், இம்மாதப் புதிர்கள் மற்றும் அனைத்து ARTICLE எழுதியுள்ளோர் என அனைவருக்கும், அனைத்திற்கும் வாழ்த்துக்கள். கடவுள் ஆசீர்வதிப்பாராக, ஆமென்.

**இறைப்பணியில்,**
**ஆயர்.**



# திடப்படுத்தினவர்கள்

ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் திருப்பெயரில் அனைவருக்கும் நல்வாழ்த்துக்கள்.

அன்பிற்கினியவர்களே, கர்த்தர் இஸ்ரவேல் புத்திரருக்குக் கொடுக்க இருக்கும் கானான் தேசத்தை சுற்றிப் பார்ப்பதற்கு கோத்திரத்திற்கு ஒருவராக பன்னிருவர் (எண் 13:1—15) அனுப்பப்பட்டனர். அவர்கள் தேசத்தை சுற்றிப் பார்த்து 40 நாள் சென்ற பின்பு திரும்பினார்கள் (எண் 13:25).

## துர்ச்செய்தி:

கானான் தேசத்தினை சுற்றிப் பார்த்து வந்தவர்களில் 10 பேர் கானான் தேசத்தில் உள்ள மக்கள் பலமானவர்கள், அவர்கள் குடியிருக்கும் பட்டணங்கள் அரணைப்பானவைகள் என்றும் அந்த மக்களை எதிர்க்க நம்மால் முடியாது என்றும் அவர்கள் நம்மை பார்க்கிலும் பலவான்கள் என்றும் இஸ்ரவேல் மக்கள் கலங்கிப் போகும் அளவிற்கு துர்ச்செய்தியை (எண் 13:26—33) தெரிவித்தனர்.

## புலம்பல்:

இச்செய்தியை கேட்ட இஸ்ரவேல் மக்கள் கூக்குரலிட்டு புலம்பினார்கள், இராமமுழுவதும் அழுதார்கள் (எண் 14:1). நாங்கள் பட்டயத்தால் மடியும் படிக்கும்,எங்கள் மனைவிகளும், பிள்ளைகளும் கொள்ளையாகும்படிக்கும் வந்தோமா என்றுப் பலவாறு மோசேக்கும், ஆரோனுக்கும் எதிராக முறுமுறுத்தார்கள் (எண் 14:1—3). மோசேயும், ஆரோனும் அனைவருக்கும் முன்பாகவும் முகங்குப்புற விழுந்தார்கள்.

## திடப்படுத்தினர்:

தேசத்தை சுற்றிப் பார்த்தவர்களில் நூனின் குமாரனாகிய யோசுவாவும், எப்புன்னேயின் குமாரனாகிய காலேபும் தங்கள் வஸ்திரங்களைக் கிழித்துக்கொண்டவர்களாக, இஸ்ரவேலர் அனைவரையும் பார்த்து நாங்கள் போய் சுற்றிப் பார்த்த தேசம் மகாநல்லதேசம், அது பாலும் தேனும் ஓடுகிற தேசம். அந்த தேசத்தின் மக்களைக் கண்டு பயப்பட வேண்டாம், கர்த்தர் நம்மோடு இருக்கிறார் (எண் 14:6—9) என்று மக்களை திடப்படுத்தினார்கள். பிரியமானவர்களே, இப்போதைய உலகில் போர்களும், அழுகையும் புலம்பலுமான அமைதியற்ற, கலக்கம் மிகுந்த, நோய்ப்பெருகிய இன்றையக் காலத்தில் கிறிஸ்தவர்களாக நாம் ஒவ்வொருவரும், அன்றைக்கு திடனற்ற மக்களை திடப்படுத்தின யோசுவா, காலேப் போல மக்களை திடப்படுத்துகிறவர்களாக வாழ்ந்திட ஆண்டவர் இயேசு நம்மை அழைக்கிறார், அப்படியே செயல்பட நம்மை அர்ப்பணிப்போம். முதலாவது பாரத்தோடு ஜெபிப்போம் நம்மால் இயன்றதை செய்வோம், அதற்காக நம்மை ஒப்புக்கொடுப்போம், ஆண்டவர் தாமே ஆசீர்வதிப்பாராக, ஆமென்.

இறைப்பணியில்,
ஆயரம்மா



*Mrs . P . Velanganni*

# செயலர் மடல்




கிறிஸ்துவுக்குள் பிரியமான திருச்சபை மக்கள் அனைவருக்கும் கிறிஸ்துவின் அன்பின் வாழ்த்துக்கள். கடந்த ஆறு மாதம் முதல் நம்மை காத்து நடத்தி வந்த கர்த்தாதி கர்த்தருக்கு நன்றி செலுத்துவோம். திருச்சபையில் கடந்த மாதம் நடந்த அத்தனை நிகழ்வுகளுக்காகவும் குறிப்பாக சிறுவர் வேதாகம பள்ளி முதல் பருவம் நன்றாக நடந்து முடிந்தது. அதற்காக நன்றி செலுத்துவோம், மீண்டும் சிறுவர் வேதாகம பள்ளி ஆகஸ்ட் மாதம் 30 ஆம் தேதி ஆரம்பிக்கப்படும், குழந்தைகள் விடுமுறை நாட்களில் சாம்பியன் பார் கிரைஸ்ட் (CHAMP FOR CHRIST) பங்கேற்க தகுந்த ஆயத்தங்களை செய்யுமாறுகேட்டுக்கொள்கிறோம்.

## உங்கள் சிந்தனைக்காக:

## சாந்தகுணமுள்ளவர்கள் பாக்கியவான்கள்:

"சாந்தகுணமுள்ளவர்கள் பாக்கியவான்கள்; அவர்கள் பூமியைச் சுதந்தரித்துக் கோள்ளுவார்கள்."
– மத்தேயு 5:5

மத்தேயு 5ம் அதிகாரத்தில் உள்ள மலை பிரசங்கம் (SERMON ON THE MOUNT) என்பது இயேசு கிறிஸ்துவின் உயர்ந்த போதனைகளில் ஒன்றாகும். அதில் உள்ள ஒவ்வொரு "பாக்கியவான்கள்" என்ற அறிக்கைகளும் (BEATITUDES) தேவனின் ராஜ்யத்தில் வாழும் ஒரு புதிய வாழ்க்கை முறைப்படியை எடுத்துரைக்கின்றன. அதில் மூன்றாவது பாக்கியம் – "சாந்தகுணமுள்ளவர்கள் பாக்கியவான்கள்" என்பதே இக்கட்டுரையின் மையமாகும்.



THE BEATITUDES

Blessed are the poor in spirit,
for theirs is the kingdom of heaven.
Blessed are those who mourn,
for they shall be comforted.
Blessed are the meek,
for they shall inherit the earth.
Blessed are those who hunger
and thirst for righteousness,
for they shall be satisfied.
Blessed are the merciful,
for they shall receive mercy.
Blessed are the pure in heart,
for they shall see God.
Blessed are the peacemakers,
for they shall be called sons of God.

## சாந்தகுணம் என்பதின் உண்மை அர்த்தம் என்ன ?

சாந்தகுணம் என்பது பலரும் தவறாக புரிந்து கொள்வது போல, பலவீனம் அல்ல. அது ஒரு சகிப்புத்தன்மை, ஒழுக்கம், தாழ்மையாகப் பேசும் தன்மை, கோபத்தைக் கட்டுப்படுத்தும் ஆற்றல், மற்றும் துன்பம் வந்தாலும் அமைதியாக இருப்பது போன்ற ஆழமான குணங்களைக் குறிக்கிறது.

பழைய ஏற்பாட்டிலும் இதற்கான எடுத்துக்காட்டுகள் அதிகம் காணப்படுகின்றன. உதாரணமாக மோசே தேவனால் "அனைத்து மனிதரிலும் சாந்தமானவன்" என்று (எண்ணாகமம் 12:3) கூறப்படுகிறான். ஆனால் அதே நேரத்தில் அவன் இஸ்ரவேலரை வழிநடத்தும் ஒரு வலிமையான தலைவரும் தான். இது சாந்தகுணம் என்பது பலவீனத்தை அல்ல, ஆன்மீக வலிமையை குறிக்கிறது என்பதற்கான தெளிவான சான்று.

## சாந்தகுணமும் பூமியின் உரிமையும் – தொடர்பு என்ன ?

"அவர்கள் பூமியைச் சுதந்தரித்துக் கொள்ளுவார்கள்" என்பது ஓர் ஆன்மீக வாக்குறுதியாகும்.

சாந்தகுணமுள்ளவர்கள் வெற்றி பெறுவதற்காக வன்முறை, சண்டை, அரசியல் விளையாட்டுகளை அல்லாமல், தங்கள் சாந்தமான இயல்பின் மூலம் மக்களின் நம்பிக்கையையும், தேவனுடைய ஆசீர்வாதத்தையும் பெற்று உலகத்தில் தக்கிக்கொள்கின்றனர். இயேசு இந்தக் கூறுபவை மூலம் உலகத்தின் ஒழுக்கநெறியைப் பூரணமாக மாற்றுகிறார். உலகம் வலிமைசாலிகளை, அதிகாரிகளை, பணக்காரர்களை உயர்த்திப் பேசும் நேரத்தில், இயேசு சாந்தமுள்ளவர்களையே பூமியின் சொந்தக்காரர்கள் எனக் கூறுகிறார்.

## நம்முடைய வாழ்க்கையில் சாந்தகுணம் எவ்வாறு வெளிப்பட வேண்டும்?

1. தன்னலமற்ற வாழ்க்கை:
2. அமைதியின் வாழ்வு
3. கோபத்தின் மேலாண்மை:
4. மன்னிக்கும் மனநிலை:

## இயேசுவின் சாந்தகுணம் – நமக்கு ஒரு மாதிரி

இயேசுவே தன்னை சிலுவையில் அறைகிற பொழுதிலும், "அவர்களை மன்னியுங்கள், அவர்கள், தாங்கள் செய்வது என்ன என்று அறியாதிருக்கிறார்கள்" எனக் கூறுகிறார். இதுவே ஒரு சாந்தகுணத்தின் உச்சம். சக்தியுள்ள சாந்தம், அழிவையும் வெல்லும். அதுவே தேவ ராஜ்யத்தின் அடையாளமாகும்.

இன்று நம் உலகம் வெறும் அறிவிலும், பொருளிலும், அதிகாரத்திலும் அடிப்படையோடு செல்கிறது. ஆனால் இயேசு கற்றுக் கொடுக்கும் சாந்தகுணம் என்பது இவை அனைத்தையும் கடந்த ஒரு ஆன்மீக வாழ்வியலை உருவாக்குகிறது.

இது வெறும் வலிமையில்லாத அமைதி அல்ல, ஆன்மீகத்திலிருந்து தோன்றும் வலிமைமிக்க அமைதி. இப்படிப்பட்ட சாந்தகுணமுள்ளவர்கள் தான் உண்மையில் இந்த பூமியை உரிமையாக்கி, தேவனுடைய ராஜ்யத்தை நிலைநாட்டுகிறார்கள்.

அதனால் நாம் அனைவரின் வேண்டுதல் எப்பொழுதும்:

"கர்த்தாவே, என் உள்ளத்தில் சாந்தகுணத்தை வளர்த்து, உமது ராஜ்யத்திற்கு ஏற்ப வாழ வல்லவராக்கும்!"




இறைப் பணியில்

Mr. Santhosh Kumar

திருச்சபைச் செயலர்



# ஜெபம் எப்படிப்பட்டதாய் இருக்க வேண்டும்

நம்முடைய பிதாவாகிய தேவனாலும் கர்த்தாராகிய இயேசு கிறிஸ்துவினாலும் நம் அனைவருக்கும் கிருபையும் சமாதனமும் பெருகக்கடவது.

நித்திய வாசியும் பரிசுத்தர் என்கிற நாமமுடையவரும், மகத்துவமும் உன்னதமுமான தேவன் நம்முடய தேவன் உன்னதத்திலும் பரிசுத்த ஸ்தலத்திலும் வாசம் ஆவாவியுள்ளவர்களிடத்தில் பன்னூகிறவர் நொருங்குண்டு மணிந்த வாசம் பண்ணுகிறேன் என்கிறார் அவர் நம்முடய உள்ளத்தில் வாசம்பண்ணுகிறார்

கர்த்தராகிய இயேசு கிறிஸ்து: நாம் ஜெபம் செய்யும்போது அறைவீட்டுக்குள் பிரவேசித்து தனிமயில் அவரிடம் ஜெபிக்க வேண்டும் என்கிறார். நாம் ஜெபம் பன்னும்போது, அதிக வார்தைகளால் நம் ஜெபம் கேட்கப்படுமென்று நிணக்கவேண்டாம் என்கிறார்.

முதலாவது நாம் அவரை போற்றி துதித்து அவருடய நாமத்தை உயர்த்த வேண்டும், அவர் பரிசுத்தர், தாவீது இப்படியாக சங்கீதம் 141:2 ல் என் விண்ணப்பம் உமகக்கு தூபமாகவும் என் கையெடுப்பு அந்திபலியாக இருக்கக்கடவது என்று போற்றுகிறார் கைகளை உயர்த்தி தம்மை தாழ்த்துகிறதை நாம் பார்க்கிறோம். அடுத்ததாக ஸ்தோத்திரம் செலுத்தி அவரை உயர்த்த வேண்டும், சங்கீதம் 50:23ல் ஸ்தோத்திர பலியிடுகிறவன் என்னை மகிமைப்படுத்துகிறான்; தன் வழியைச் செவ்வைப் படுத்துகிறவனுக்குத் தேவனுடைய இரட்சிப்பை வெளிப்படுத்துவேன் என்று சொல்லுகிறார், அவருடைய சித்தம் நடைபெற ஜெபிக்கவேண்டும் ஏனென்றால் இயேசு கிறிஸ்து, என் நமத்தின் படி நீங்கள் எதை கேட்டாலும் பிதா மகிமை படும்படியாய் அதை செய்வேன் என்கிறார் பிதா மகிமை படும்படியாய் நம்முடைய ஜெபம் இருக்க வேண்டும்.

நமக்கு என்ன தேவை என்பதை அறிந்திருக்கிற தேவன்,அவருடைய இராஜ்ஜியத்தையும் நீதியையும் தேடுவதை விரும்புகிறார், மத்தேயு 6ல் இயேசு ஆகையால், என்னத்தை உண்போம், என்னத்தைக் குடிப்போம், என்னத்தை உடுப்போம் என்று கவலைப்படாதிருங்கள். இவைகளையெல்லாம் அஞ்ஞானிகள் நாடித்தேடுகிறார்கள்; இவைகளெல்லாம் உங்களுக்கு வேண்டியவைகள் என்று உங்கள் பரமபிதா அறிந்திருக்கிறார். முதலாவது தேவனுடைய ராஜ்யத்தையும் அவருடைய நீதியையும் தேடுங்கள், அப்பொழுது இவைகளெல்லாம் உங்களுக்குக்கூடக் கொடுக்கப்படும்.

தாவீது சிங்க கெபியில் இருக்கும்பொது ஆண்டவரை நோக்கி இவ்வாறு ஜெபிக்கிறார். என் கைகளை உமக்கு நேராக விரிக்கிறேன்; வறண்ட நிலத்தைப்போல் என் ஆத்துமா உம்மேல் தாகமாயிருக்கிறது என்கிறார். அதிகாலையில் உமது கிருபையைக் கேட்கப்பண்ணும், உம்மை நம்பியிருக்கிறேன், நான் நடக்கவேண்டிய வழியை எனக்குக் காண்பியும்; உம்மிடத்தில் என் ஆத்துமாவை உயர்த்துகிறேன். உமக்குப் பிரியமானதைச் செய்ய எனக்குப் போதித்தருளும் நீரே என் தேவன்; உம்முடைய நல்ல ஆவி என்னைச் செம்மையான வழியிலே நடத்துவாராக, கர்த்தாவே, உம்முடைய நாமத்தினிமித்தம் என்னை உயிர்ப்பியும்; உம்முடைய நீதியின்படி என் ஆத்துமாவை இடுக்கத்திற்கு நீங்கலாக்கிவிடும். உம்முடைய கிருபையின்படி என் சத்துருக்களை அழித்து, என் ஆத்துமாவை ஒடுக்குகிற யாவரையும் சங்காரம்பண்ணும்; நான் உமது அடியேன். என்று ஜெபித்தார்.

கடைசியாக நம்முடைய ஜெபம் எப்பொழுதும் அவருக்கு பிரியமானதாய் இருக்க வேண்டும், சங்கீதம் 19 ல் தாவீது இப்படியாக ஆண்டவரின் வார்த்தைக்கு செவிகொடுத்து ஜெபிக்கிறதை பார்க்கிறோம். தன் பிழைகளை உணருகிறவன் யார்? மறைவான குற்றங்களுக்கு என்னை நீங்கலாக்கும். துணிகரமான பாவங்களுக்கு உமது அடியேனை விலக்கிக்காரும், அவைகள் என்னை ஆண்டுகொள்ள ஒட்டாதிரும்; அப்பொழுது நான் உத்தமனாகி, பெரும்பாதகத்துக்கு நீங்கலாயிருப்பேன். என் கன்மலையும் என் மீட்பருமாகிய கர்த்தாவே, என் வாயின் வார்த்தைகளும், என் இருதயத்தின் தியானமும், உமது சமுகத்தில் பிரீதியாயிருப்பதாக.

நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவினாலே நமக்கு ஜெயங்கொடுக்கிற தேவனுக்கு ஸ்தோத்திரம்

Reference: Isaiah, Mathew 6, psalm 19, 50, 142, 143, 1 Corinthians.

Article by

**MR. HERCHIL HARISH**

Men's Fellowship

# 2 CHRONICLES 1-12

# 2 நாளாகமம் 1-12

1. சாலமோனின் குதிரை வீரர்கள் எத்தனைப் பேர்?
2. லீபனோனில் வெட்டிய மரங்கள் எங்கு கொண்டுவரப்பட்டது?
3. கால்களால் ஊன்றி நின்றவை எவை?
4. ஆலயத்தின் பணி மூட்டுகளைச் செய்தவர் யார்?
5. இசைக் கலைஞரான ஆசாரியர்கள் எத்தனைப் பேர்?
6. இரட்சிப்பைத் தரித்து நிற்பவர்கள் யார்?
7. ஜனங்கள் தங்கள் கூடாரங்களுக்குப் போன தேதி எது?
8. ராஜாவின் கட்டளையை விட்டு விலகாதிருந்தவர்கள் யார்?
9. சாலொமோன் கற்களைப் போல அதிகப்படுத்தியது என்ன?
10. கல் எறிந்துக் கொல்லப்பட்டது யார்?
11. 88 பிள்ளைகளை உடையவன் யார்?
12. சாலொமோன் செய்வித்த பொன் பரிசைகளை எடுத்துப் போனவன் யார்?

ஒவ்வொரு மாதமும் மன்னாவிற்கான விடைகள், அதின் அதிகாரம் மற்றும் வசனமும் குறிப்பிட்டு அம்மாதம் 15ம் தேதிக்கு முன் ஈமெயில் அல்லது வாட்சப் மூலமாக கீழ்கண்ட தலைப்பில் அனுப்பி வைக்கவும்.

### ஜூன்-2025 மாத வினாவிற்கான விடைகள்

1. 1நாளா16:37,
2. 1நாளா17:22,
3. 1நாளா18:15,
4. 1நாளா19:11,
5. 1நாளா20:5,
6. 1நாளா21:25,
7. 1நாளா22:13,
8. 1நாளா23:17,
9. 1நாளா24:6,
10. 1நாளா25:21,
11. 1நாளா26:27,
12. 1நாளா27:32,
13. 1நாளா28:19,
14. 1நாளா29:12.

### ஜூன்-2025 மாத வினாவிற்கான விடைகள் எழுதியவர்கள்

திருமதி. ஜெனிபர் பால்,

திருமதி. ராதிகா செல்வக்குமார்,

திருமதி. பிப்ளின் நெல்சன்,

திருமதி. ஹேமலதா ஸ்டீபன்,

செல்வி. அஜின்ஷா,

திருமதி. ஜோனிஸ் ஹெர்சல்,

திருமதி. ரோஸ்மேரி



# அமைதி

## ஆவிக்கான ஆளுமையின் அழகு

(Peace – A Spiritual Strength in a Woman's Life)

**உன் மனைவி உன் வீட்டோரங்களில் கனிதரும் திராட்சக்கொடியைப்போல் இருப்பாள், உன் பிள்ளைகள் உன் பந்தியைச் சுற்றிலும் ஒலிவமரக் கன்றுகளைப்போல் இருப்பார்கள். - சங்கீதம் 128:3**

### அறிமுகம்:

இந்த உலகம் சத்தமும், பதற்றமும் நிறைந்தது. பெண்களின் வாழ்க்கை - மகள், மனைவி, தாய், என பல வேடங்களில் ஓடிக்கொண்டிருக்கிறது. ஆனால் இந்த வேகமான வாழ்வில், பெண்கள் தேடும் மிக முக்கியமான ஒன்று தான் அமைதி.

### 1. அமைதி என்பது ஆவியின் கனியாகும்:

"ஆவியின் கனியோ, அன்பு, சந்தோஷம், சமாதானம், நீடியபொறுமை, தயவு, நற்குணம், விசுவாசம். சாந்தம், இச்சையடக்கம்; இப்படிப்பட்டவைகளுக்கு விரோதமான பிரமாணம் ஒன்றுமில்லை- கலாத்தியர் 5:22 இது ஒரு பெண் வேதபடியாக வளரும்போது, அவளது உள்ளத்திலிருந்து அமைதி வெளிப்படுகிறது. இது ஒரு உள்ளார்ந்த நிலையாகும்- அங்கீகாரம், சமாதானம், தேவனுடன் இணைவது.

### 2. அமைதி கொடுக்கும் தீர்வுகள்:

அமைதியான பெண் ஒரு பிரச்சனையின் நடுவிலும் தீர்வை தேடுகிறாள்- விமர்சிப்பதற்குப் பதிலாக ஜெபிக்கிறாள்.

நீதிமொழிகள் 31:26:

"அவள் தனது வாயை ஞானத்துடன் திறக்கிறாள்; அவளது நாவிலே கருணையின் சட்டம் இருக்கிறது."

அவளது அமைதி குடும்பத்துக்கே வழிகாட்டும். ஒரு பெண் அமைதியாக இருக்கும்போது, அவள் சுற்றமும் அமைதியாகிறது.

### 3. அமைதி தரும் பெண்ணின் வல்லமை:

அமைதி என்பது பலவீனத்தின் அடையாளம் அல்ல அது மனதின் வல்லமை. தொடர் பிரச்சனைகளுக்கும், மன அழுத்தங்களுக்கும் இடையே, ஒரு பெண் தனது மனதையும், வார்த்தைகளையும் கட்டுப்படுத்திக் கொள்வது- அது ஆவிக்கான வீரத்தைக் காட்டுகிறது.

### 4. இயேசுவில் அமைதி

இயேசு சொன்னார்:

"நான் உங்களுக்குச் சமாதானத்தை விட்டுச் செல்கிறேன்; என் சமாதானத்தையே உங்களுக்குக் கொடுக்கிறேன்." – யோவான் 14:27

ஒரு பெண் இயேசுவை நம்புகிறாள் என்றால், அவளது அமைதி எந்த சூழ்நிலையும் கடந்து செல்லும். அந்த அமைதி அவளுக்கு பொறுமை, சகிப்பு, மன்னிப்பு ஆகியவற்றைக் கற்றுத்தரும்.

### முடிவுரை:

அமைதி என்பது பெண்களுக்கு தேவனின் பரிசு மட்டுமல்ல – அது அவர்களின் ஆளுமையின் ஒளி. அமைதியான பெண்ணின் வாழ்க்கை என்பது குடும்பத்திற்கும் சமூகத்திற்கும் ஆசீர்வாதமாக மாறுகிறது.

இயேசுவின் சமாதானம் நமது உள்ளங்களை நிரப்பி, நம் வாழ்நாளின் ஒவ்வொரு செயலிலும் அந்த அமைதி பிரதிபலிக்கக் கர்த்தர் கிருபையளிக்க வேண்டுமாக.

– ஆமேன்

Article by

**MRS. SHALLU SIMEYON**

Women's Fellowship




சிறு பிள்ளைகள் நம்பிக்கைக்கு நற்சாட்சிகள், இறையரசின் முன்மாதிரிகள் என்பதை திருமறை நமக்கு கற்றுக் கொடுக்கிறது.

திருமறைப் பகுதி: 2 இராஜாக்கள் 5:1–14.

### நிகழ்வு:

சீரிய அரசர் பெனாதாத் என்பவரின் படைத்தலைவர் நாகமான். இவர் வழியாக சீரியாவுக்கு ஆண்டவர் பல வெற்றிகளைக் கொடுத்தார். எனவே நாகமான் மீது அரசருக்கும், நாட்டு மக்களுக்கும் மதிப்பும் மரியாதையும் இருந்தது. ஆனால் நாகமான் ஒரு தொழுநோயாளி. ஒருமுறை இஸ்ரவேல் நாட்டின் மீது போர் புரிய சீரியா நாட்டினர் சென்றபோது,ஒரு சிறு பெண்ணைச் சிறை பிடித்து வந்து, நாகமானின் மனைவிக்கு பணிவிடை செய்ய அமர்த்தினர். ஒருநாள் இச்சிறு பெண் நாகமானின் மனைவியிடம் நாகமான் இஸ்ரவேலின் தீர்க்கதரிசியிடம் சென்றால் அவரின் நோய் குணமாகும் என்றாள். உடனே இச்செய்தியை நாகமானுக்கு அவர் மனைவி அறிவிக்க, நாகமான் சீரிய அரசரின் கடிதத்துடன் எலிசா தீர்க்கரிடம் சென்று, அவர் கூறியபடி யோர்தானில் ஏழு முறை மூழ்கி முழுமையான விடுதலை பெற்றார். ஒரு சிறு பெண்ணின் செயல் மிகப்பெரிய சுகத்திற்கு, அற்புதத்திற்கு காரணமாக அமைந்தது.

தொழு நோயாளி ஒருவர் நலம் பெறவும், பிற சமயத்தவர் உண்மைக் கடவுளை உணரவும் காரணமாயிருந்தது ஒரு சிறு பெண்ணே.ஒரு சிறுமியிடம் இருந்த இறை நம்பிக்கையும்,தன் நாட்டைக் குறித்தும், கடவுளைக் குறித்துமான தெளிவு தன் அடிமைப் பணியிலும் உண்மையும் பிறர் நலனில் அக்கறைக் கொள்ளும் பண்பும் ஒரு நாட்டிற்கே நற்செய்தியாக அமைந்தது. அதுபோல நாமும் பிறர் வாழ்வுக்குக் காரணமாகி இறையரசின் மாதிரிகளாய் விளங்குவோம்.

### கருத்து:

நன்மை செய்யும்படி உனக்குத் திராணி இருக்கும்போது, அதைச் செய்யத்தக்கவர்களுக்கு செய்யாமல் இராதே. (நீதிமொழிகள் 3:27

Article by

**MRS. J.BLESSY JEBA**

Youth Fellowship



# இயேசுவின் சீடன் யோவான்

**பெயர் மற்றும் குடும்பம்:**

யோவான் என்பவர் செபதேயுவின் மகன். அவருடைய சகோதரர் யாக்கோபும் இயேசுவின் சீடராக இருந்தார். அவர்கள் இருவரும் மீனவர்கள்.

**அழைப்பு:**

இயேசு, அவர்களை மீனவர்கள் ஆக இருந்தபோது அழைத்து, "மனுஷரை பிடிக்கும் மீனவர்கள்" ஆக்கினார் (மத்தேயு 4:21–22).

**பாசம் மிகுந்த சீடர்:**

யோவான் "இயேசு நேசித்த சீடன்" என்று குறிப்பிடப்படுகிறார் (யோவான் 13:23). கடைசி இரவு உணவில் இயேசுவுக்கு அருகில் இருந்தார்.

**முக்கிய நிகழ்வுகள்:**

- இயேசுவின் மாறுபாடு (TRANSFIGURATION) நிகழ்வின் போது பீட்டர், யாக்கோபுடன் யோவானும் இருந்தார்.
- ஜெத்சேமனே தோட்டத்தில் இயேசு இறுதியாக ஜெபிக்கும்போது அருகில் இருந்தவர்.
- இயேசு சிலுவையில் தங்கும்போது, தாயாராகிய மரியையை யோவானிடம் ஒப்புவித்தார் (யோவான் 19:26–27).
- இயேசுவின் ஞாயிறு எழுச்சி பிறகு காலி கல்லறையைக் கண்ட முதல் சீடர்களில் ஒருவர்.

**பின் வாழ்வு:**

யோவான், பத்தமோஸ் தீவுக்கு அடிமைத்தனமாக அனுப்பப்பட்டபோது, அங்கே "வெளிப்படுத்தல்" புத்தகத்தை எழுதினார். அவர் யோவான் நற்செய்தி புத்தகம், மூன்று யோவான் கடிதங்கள் (1யோவான், 2யோவான், 3யோவான்) மற்றும் வெளிப்படுத்தல் ஆகியவற்றை எழுதியதாக நம்பப்படுகிறது.

**இறுதி**

மற்ற சீடர்கள் எல்லாம் தூண்டிலிட்டு கொல்லப்பட்டபோதிலும், யோவான் இயேசுவின் மரணத்திற்கு பிறகு இயற்கையான முறையில் இறந்த ஒரே சீடராக கருதப்படுகிறார்.

**யோவானிடமிருந்து நாம் கற்றுக்கொள்ள வேண்டியது:**

| | |
|---|---|
| அன்பு | யோவான் தனது எழுத்துகளில் "அன்பு" என்பதைக் குறிக்க முக்கி—யத்துவம் அளிக்கிறார். |
| விசுவாசம் | இயேசுவின் மரணத்துக்கும் எழுச்சிக்கும் சாட்சியாக இருந்தார் |
| தன்னல மின்மை: | இயேசுவின் தாயார் மரியாவை தன் தாயாக ஏற்று கவனித்தார். |
| உண்மைத் தன்மை: | நற்செய்திக்காக அடிக்கடி துன்பங்களை சந்தித்தார். |


**தூய்மை மற்றும் விசாரணை ஆவியை வளர்த்தல்:**

வெளிப்படுத்தலின் படியாக, கடைசி நாட்களைப் பற்றிய இறையாட்சி பார்வையுடன் வாழ்ந்தவர்

இயேசுவின் சீடர்களில் மிக முக்கியமானவராகவும், "அன்பு சீடன்" என அடையாளம் பெறும் யோவான், கிறிஸ்தவ உலகில் அன்பும் விசுவாசமும் நிரம்பிய ஒரு சிறந்த மாதிரியான வாழ்கையை எடுத்துக்காட்டுகிறார்

Article by

**MRS. AJINSHA**



# JUNE Winners

## Cross Word

- Iniyan Immanuel
- Sherinsha
- Smyrna Syntyche

## Fill in the Blanks

- Hazel Hartlyn
- Iniyan Immanuel
- Sherinsha
- Smyrna Syntyche
- Tarun

## Kids Colouring

- Hazel Hartlyn
- Iniyal Evangelin
- Jesil Bernice
- Shipra Shalom
- Smyrna Syntyche
- Tara

## Word Search

- Hazel Hartlyn
- Iniyal Evangelin
- Jesil Bernice
- Sherinsha
- Smyrna Syntyche
- Tarun


ஒவ்வொரு மாதமும் மன்னாவிற்கான விடைகள், அதின் அதிகாரம் மற்றும் வசனமும் குறிப்பிட்டு அம்மாதம் 20ம் தேதிக்கு முன் ஈமெயில் மூலமாக கீழ்கண்ட தலைப்பில் அனுப்பி வைக்கவும்.

You are encouraged to Complete the tasks given in Manna; and do please send to us; on or before 20th of every month, Email Subject shall be in the following format.

**Email Subject:** Your name / Quiz, type / Month - Year

**To Church Email:** csitcalain@gmail.com


மன்னாவிற்கான விடைகளை நீங்கள் எழுதி அனுப்பியிருந்தும், பிள்ளைகளின் பெயர் அல்லது உங்கள் பெயர் விடுபட்டிருந்தால் அதற்காக வருந்துகிறோம். தயவுகூர்ந்து உடனடியாக எங்களுக்கு தெரியப்படுத்தவும் அடுத்த மன்னாவில் அதை சரிசெய்து பதிவிட விரும்புகிறோம்.



Lord, hear my Prayer

Dear God.
Please bless and provid
for the Children who are
in need food, Clothes. Pleas
give them. I pray for the
Children in my Church and
CBS. that they may feel You
love and
care. in Jesus name
Amen!

By Jessica





Tarun

Dear God


Thank you for your love and care.
please bless me and my family with
good health and happiness
Help us to grow strong, kind, and wise

Bible verse:
"Beloved, I pray that you may
prosper in all things and be
in health, Just as your soul prosper
- 3 Jhon 1:2


Lord, hear my Prayer
Dear Lord,
thank you for your love
and care, help me to be
good to everyone, help me
and my friends to study well,
bless us, guide us and
protect us. In Jesus
name I pray,
Amen.
JANIA


Dear God
I am thankful
for all you give
me, for food, for love
and place to live.
Thank you for your
love and mercy.
Thank you for every
beautiful blessing
that proceeds from you.
Amen



PRAYER BOARD
GOD
Therefore know that the Lord your God He is God the faithful God who keeps covenant and mercy for a thousand generations with those who love Him and keep His Commandments
FAMILY
A new Commandment I give to you that you Love one another as I have Loved you that you also Love one another
SELF
I will praise You for I am Fearfully and wonderfully made Marvelous are your works and that my Soul knows very well.
Psalm 139:14
LOVE
ANSWERED!
Mark 11 24
Therefore I Say to you whatever things you ask when you pray believe that you receive them and you will have them
FUTURE
Jeremiah 29:11
For I know the thoughts that I think toward you Says the Lord thoughts of peace and not of evil to give you a Future and a hope


Lord, hear my Prayer
By,
CHRIS GABRIEL
be kind to others teach me
to Love everyone Let all the poor
people get food and Shelter Let all
people be healed.

Name:

Date:

# Kids Coloring





# DAVID & GOLIATH



**Read 1 Samuel 15:1-18:7. Find and circle the words below.**

| | | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| G | D | K | D | I | B | J | F | M | A | O | O | N | T | R |
| O | T | J | A | H | W | E | R | H | P | C | B | Y | A | T |
| L | J | I | V | W | V | E | J | S | H | T | D | B | F | E |
| I | K | A | I | E | R | Z | Q | G | I | L | I | L | I | L |
| A | G | R | D | G | G | X | F | P | L | C | S | A | V | A |
| T | A | R | G | B | Z | T | W | O | I | K | R | X | E | H |
| H | T | D | K | A | I | X | M | Q | S | A | A | X | S | V |
| J | O | P | P | I | R | H | X | Y | T | R | E | I | T | A |
| V | G | P | W | Q | N | K | S | D | I | M | L | R | O | L |
| D | T | I | S | O | O | G | G | Z | N | O | I | N | N | L |
| O | S | Z | A | K | U | G | S | X | E | R | T | T | E | E |
| C | Y | Q | Z | N | M | B | M | A | S | P | E | Z | S | Y |
| O | A | Z | L | A | T | O | Q | Z | U | Q | S | Y | Y | Q |
| Z | A | R | M | Y | L | O | W | G | C | L | G | V | M | Q |
| S | L | I | N | G | P | S | H | E | P | H | E | R | D | Y |

- GIANT
- DAVID
- ELAH VALLEY
- SLING
- PHILISTINES
- GOLIATH
- ARMY
- FIVE STONES
- ISRAELITES
- KING SAUL
- SHEPHERD
- ARMOR

Name : ..............................................................


WORD SEARCH

# FIND THE WAY

Name : ..............................................................


## Jesus and the Children Maze

Help connect Jesus and the children.



# CROSS WORD

Name : ..........................................................................



**Across**

1 An ancient weight (6)

4 Seemed (8)

10 New Testament book (9)

11 Unit of length (5)

12 '...it is a ____ thing the king requireth' (Dan 2:11) (4)

13 Contemplation (10)

15 Abigail supplied David with one hundred clusters of these (7)

16 A son of King David (6)

19 Concurred (6)

21 Light sources (7)

23 Propitiations (10)

25 A false god (4)

27 Gather (5)

28 Abimelech was hit by this (9)

29 Instructors (8)

30 Hastily (6)

**Down**

1 Skilled animal workers (8)

2 Inspiring (9)

3 Compass point (4)

5 Intense emotion (7)

6 The words of Jeremiah said not to listen to these (10)

7 Jewish leader (5)

8 'He is proud, knowing nothing, but ______ about questions and strifes of words...' (1 Tim 6:4) (6)

9 Bread makers (6)

14 In this year of King Nebuchadrezzar's reign, Nebuzaradan arrived in Jerusalem (10)

17 Ancient city of Og, King of Bashan (9)

18 Stringed instrument (8)

20 Joseph, perhaps? (7)

21 Tiny amount (6)

22 Jesus did this with authority (6)

24 Last letter of the Greek alphabet (5)

26 Province of the Roman Empire (4)

# JULY - 2025

| | |
|---|---|
| 01-JULY | Mr. A. Ravichandran |
| 01-JULY | Ms. Mckayla Davelyn |
| 02-JULY | Mrs. Jackquline Princy |
| 04-JULY | Master. A. Eric Aaron |
| 05-JULY | Mrs.. Jessy Beula John Joseph |
| 05-JULY | Master. Joshuva Koshy |
| 05-JULY | Ms. Isabella Jane |
| 05-JULY | Mr. Thanu Lingam |
| 05-JULY | Mr. M. Prasanna Kumar |
| 07-JULY | Mrs. Hepsi Bai Nesamony |
| 08-JULY | Ms. Amala Charles |
| 09-JULY | Mrs. R. Gold Jency |
| 10-JULY | Master. Eric Jayden |
| 11-JULY | Ms. Elianna Kacy |
| 11-JULY | Master. Aishlin Babu |
| 13-JULY | Mr. Bhaskar Rajaram |
| 13-JULY | Mrs. Pamela Rachel Daniel |
| 13-JULY | Mr. Sutharson Selva Raj |
| 14-JULY | Mr. Jason Samuel |
| 15-JULY | Mr. Sankaran Chinniyan |

*"For through wisdom your days will be many, and years will be added to your life."*
*-proverbs 9:11*

# JULY - 2025

May he give you the desire of your heart and make all your plans succeed. -psalm 20:4

| | |
|---|---|
| 17-JULY | Mrs. Mercy Rajam |
| 18-JULY | Ms. Ruth Radhika |
| 19-JULY | Mrs. Sangeetha |
| 21-JULY | Mr. Franklin Christopher |
| 22-JULY | Mrs. Baby Christy Monalizha |
| 23-JULY | Mr. Ravindra |
| 23-JULY | Mrs. Vimala Thanga Raj |
| 25-JULY | Mrs. Angelin Nalini |
| 25-JULY | Mr. Timotheus Dill Suresh |
| 26-JULY | Mrs. Roselin Tamil Selvi |
| 28-JULY | Mrs. Beeta Christopher |
| 28-JULY | Mr. David Sornabalan |
| 29-JULY | Master. Mervin Samuel |
| 29-JULY | Ms. Jania Preni |
| 29-JULY | Mr. Dennis Roger |
| 29-JULY | Master. Jaidan Suji Kumar |
| 30-JULY | Ms. Bernicia Leenus Obed |
| 31-JULY | Mr. Kingsly Stoobert |
| 31-JULY | Mrs. G.S. Biji Kumari |

# JULY *Wedding* ANNIVERSARY

**02-JULY** Mr. Leenus Patrick Obed & Mrs. Iswarya Obed

**02-JULY** Mr. V. Arun Kumar & Mrs. K. Santhiya

**03-JULY** Mr. S. Ashok Kumar & Mrs. Philomina

**04-JULY** Mr. A.S. Kannan & Mrs. Lavanya Kannan

**06-JULY** Mr. K. Arunkumar & Mrs. S. Banu Priya

**08-JULY** Mr. George Rose & Mrs. Anitha Geroge

**09-JULY** Mr. Franklin Christopher & Mrs. Catherine Judith F

**12-JULY** Mr. David Livingston & Mrs. Beula Rani Livingston

**14-JULY** Mr. C. Rajesh Anbu & Mrs. D. Mercylin Latha

**25-JULY** Mr. Sankaran Chinniyan & Mrs. Kalyani Sankaran

*"Two are better than one, because they have a good return for their labor: If either of them falls down, one can help the other up."*

-Ecclesiastes 4:9-10


















Memory Verse


















*When you pass through the waters,*

# I WILL BE WITH YOU.

ISAIAH 43:2



EDITOR
THE PRESBYTER - CSI TAMIL PARISH-ALAIN, UAE
TEL: +971 (3) 766 8353 | MOB: 056 7668 348
Email: csitcalain@gmail.com
Web: csitamilparishalain.org

STRICTLY FOR INTERNAL CIRCULATION ONLY